**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்</u>**

முன்னிலை திரு. **A.S.அமீர்தீன், B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,**

நீதித்துறை நடுவர், இரணியல்

**2025** ஆம் ஆண்டு **மார்ச்** மாதம் **07**ஆம் நாள் **வெள்ளிக்கிழமை**

**<u>M.P.No.1/2025</u>**

in

**<u>STC 996/2010</u>**

அருள்சோபின் ............... மனுதாரர்
த/பெ. துரைசாமி
கதவு எண் 6-4/2, காட்டுவிளை
வெள்ளிசந்தை அஞ்சல்

/எதிர்/

1. வட்டார கடவுசீட்டு அதிகாரி ................ 1ம் எதிர்மனுதாரர்
வட்டார கடவு சீட்டு அலுவலகம்
மதுரை வட்டம்,
பாரதி உலாவீதி,
ரேஸ் கோர்ட் ரோடு, மதுரை 625 002

2. காவல் ஆய்வாளர், ................. 2ம் எதிர்மனுதாரர்
வெள்ளிசந்தை காவல் நிலையம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

கடந்த **03.02.2025** ஆம் தேதி மனுதாரர் தனக்கு வட்டார கடவு சீட்டு அலுவலர் தனக்கு கடவு சீட்டு தருவதற்கு உத்தரவிட வேண்டும் என்றும், அவரது தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. M.வேல்குமார்** அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும் இருதரப்பும் கேட்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் .........

**// உத்தரவு //**

**1. <u>மனுதாரர் அருள்சோபின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் மீது வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு கோப்பு இந்நீதிமன்ற சு.வி.வ.எண் 996/2010 ஆக நிலுவையில் உள்ளது என்றும், தான் பணியின் நிமித்தமாக தன்னுடைய கடவுச்சீட்டை புதுப்பிப்பதற்காக 1வது எதிர்மனுதாரரிடம் மனு செய்த போது மேற்படி மனுவானது நிராகரிக்கப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் தன்னுடைய கடவுசீட்டை புதுப்பித்து தர உத்தரவிடவேண்டும் என்றும், தன்னுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறி இந்நீதிமன்றத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கு முடியும் தருவாயில் உள்ளது என்றும், மேற்படி மனுதாரர் தப்பித்து சென்றுவிட்டால் மேலும் விசாரணை காலதாமதம் ஆகும் என்றும், எனவே கடவுசீட்டு புதுப்பிப்பதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

3. **இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்.**

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பு சங்கதிகளும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் **அருள்சோபின்** தரப்பில் தனது தரப்பு சங்கதிகளை சத்திய பிரமாண வாக்குமூலம் மூலமாக சமர்பித்துள்ளார்.

5. ஒரு நபர் தன்னுடைய வாழ்வாதாரத்திற்காக பரந்துவிரிந்த உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் சென்று வருமானம் ஈட்டலாம் என்ற நிலையில், தன்னுடைய கல்வி தகுதிக்கு ஏற்றவாறு ஒரு நபர் தனக்கு வாய்ப்பு கிடைக்கும் நிறுவனத்தில் எந்தவொரு இடத்திற்கும், எந்தவொரு நாட்டிற்கும் செல்வதற்கு சட்டபடியாக எந்த தடையும் இல்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

6. சட்டத்தினாலன்றி, ஒரு நபரின் சுதந்திரமானது பறிக்கபடலாகாது என்று இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வலியுறுத்தியுள்ள நிலையில் மேற்படி மனுதாரர் **அருள்சோபின்** வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்வதை தடுக்கும் பட்சத்தில் அவரை நியாயமாக வேலையில் இருந்தால் எவ்வளவு வருமானம் ஈட்ட முடியுமோ அந்த வருமானத்தை மேற்படி 2ம் எதிர்மனுதாரர் தருவதற்கு தயாரா என்று இந்நீதிமன்றம் வினவிய போது, மௌனம் மட்டுமே பதிலாக கிடைத்தது.

7. ஒரு நபர் மீது குற்றவழக்கு நிலுவையில் இருந்தது என்பதை காரணம் காண்பித்து ஒரு நபருக்கு கடவுசீட்டு வழங்க மறுப்பது சட்டமுரணானது என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அவ்வாறு இருந்தால் யார், யார் எல்லாம் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்லக் கூடாது என்ற நினைக்கிறார்களோ அவர்கள் மீது அவர்களின் எதிர் தரப்பினர் ஒரு பெயரளவில் ஒரு வழக்கினை பதிவு செய்துவிட்டால் போதும் என்ற நிலை வந்துவிடும் என்பதும், மேற்படி நிலையானது சமுதாய ஒழுங்கியலில் மற்றும் தனிமனித முன்னேற்றத்தையும் பாதிக்கும் என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

8. மேலும்,மேற்படி மனுதாரர் சமர்பித்த பிரமானபத்திரத்தின் படியும், வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இந்நீதிமன்றம் மேற்படி மனுதாரரான **அருள்சோபினுக்கு** அவர் கேட்ட பரிகாரத்தை வழங்குவதே உசித்தம் என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு **இம்மனுவினை அனுமதித்து** அதன் அடிப்படையில் பின்வரும் உத்தரவை பிறப்பிக்கிறது.

அ) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத நாள்களில் தனது வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி வழக்கினை நடத்துவதாகவும், நேரடியாக முன்னிலையாக உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் நேரடியாக முன்னிலைகி, வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தருவேன் என்று பிரமாண வாக்குமூலம் மூலம் தெரிவிக்க வேண்டும்.

ஆ) எதிர்மனுதாரரான வட்டார கடவுச்சீட்டு அதிகாரி, மதுரை இவ்வுத்தரவு கிடைத்த 30 நாட்களுக்குள் மேற்படி மனுதாரர் **அருள்சோபினுக்கு** கடவுச்சீட்டுக்கான

விண்ணப்பத்தை அளிக்கும் போது, அல்லது இதற்கு முன்னர் அளித்த விண்ணப்ப மனுவினை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்து, அதனை பரிசீலித்து மேற்படி **அருள்சோபினுக்கு** கடவுச்சீட்டினை புதுப்பித்து வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இ) மேற்படி கடவுச்சீட்டு 2 **ஆண்டுகளுக்கு** ஒருமுறை புதுப்பிக்கும் நிபந்தனையுடன் மேற்படி கடவுச்சீட்டு கொடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

ஈ) மேற்படி மனுதாரர் **அருள்சோபின்** வழக்கு விசாரணைக்கு முறையாக தனது வழக்கறிஞர் மூலம் முன்னிலையாக வேண்டும் என்றும், வழக்கு விசாரணைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்த கூடாது என்றும், தான் சம்மந்தப்பட்ட வழக்குகளில் உள்ள தரப்பினர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்தவித தொந்தரவும் செய்யக் கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு வாய்மொழியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் 2025 ஆம் ஆண்டு **மார்ச்** மாதம் 7ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்) A.S. அமீர்தீன்
நீதித்துறை நடுவர்
இரணியல்

Judicial Magistrate Court, Eraniel

Court Seal

"The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date".

Copy To

1. The Regional Passport Officer,
   Regional Passport Office,
   Maduari Region,
   Bharathi Ula Veethi,
   Race Court Road. Madurai
2. Inspector of Police
   Vellichanthai P.S
   Vellichanthai

// உண்மை நகல்//